8th November 1966]

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் அவர்கள் வெள்ளம், புயல் சேதம் பற்றி வைத்த அறிக்கை மீது பொதுவாக மன்ற அங்கத்தினர்களும், குறிப்பாக பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சார்ந்த 10–00 a.m. உறுப்பினர்கள் தங்கள் விவரங்களைத் தரவும், விளக்கங்கள் வைக்கவும், பரிந்துரைகள் செய்யவும் வாய்ப்புகள் ஏற்படுத்தும் வகையில் நாளை இரண்டு மணி நேரம் ஒதுக்கித் தந்தால் அதில் கருத்துக்கள் வழங்க வாய்ப்பு ஏற்படும். அது மட்டுமல்லாமல் முதல் அமைச்சர் அவர்கள் படித்த அறிக்கையின் படி இன்றே கனம் உறுப்பினர்களுக்குக் கிடைக்க வழிவகை செய்தால் தாங்கள் அதுபற்றி கருத்துக்கள் சொல்ல வாய்ப்பு ஏற்படும் அதற்கு வழி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த அறிக்கையின் நகல் எல்லா அங்கத்தினர்களுக்கும் அளிக்கப்படும். இன்றைக்கு இருக்கிற அஜெண்டா இன்று முடிந்துவிடும் என்று நினைக்கிறேன். நாளை இரண்டு மணி நேரம் அல்லது ஒரு மணி நேரம் வேண்டுமானால் விவாதம் வைத்துக் கொள்ளலாம்.

IV.—PRESENTATION OF REPORT

REPORT OF COMMITTEE ON ESTIMATES ON DIRECTORATE OF HANDLOOMS.

SRI P. RAMACHANDRAN : Mr. Speaker, Sir, I rise to present the Second Report of the Committee on Estimates (1966-67) on the Directorate of Handlooms.

V.—RULING *RE* DIVISION DURING GUILLOTINE

MR. SPEAKER : Hon. Members are aware that on the 28th March 1966, during the last Budget Session, the hon. Member, Sri K. A. Mathialagan asked for a division on a Demand after the guillotine was applied, and that was refused by the chair. He raised a point of order on this which I promised to examine, and give my opinion later on.

The hon. Member, Sri Mathialagan stated that Rule 155 of the Madras Assembly Rules enables the Speaker to terminate a discussion or debate on a Demand and did not exclude the right of the Member to demand for a division. The hon. Members, Sri M. Kalyanasundaram and Sri M. Karunanithi also supported this view and said that the application of guillotine related only to the termination of the discussion.

When other Legislatures were consulted, I find that there is no specific instance on the point for decision before us. In the House of Commons, guillotine motions are a form of closure applied to the discussion on Bills, and there is no definite guidance for us from there also. Therefore, I have to change my views and to decide that, if a Member wants a division after the guillotine is applied, it has to be allowed. Any cut motion already moved, before guillotine is applied, will also be put. But no cut motions not moved, will be allowed to be moved, nor put to the House

[Mr. Speaker] [8th November 1966

Of course, the Speaker has always the discretion to adopt any of the recognised modes of taking division to expedite matters and to avoid delaying tactics.

The guillotine is mentioned as a division saving form in a book of Parliamentary Procedure of the House of Commons by Lord Campion. I understand that in this way. In a democracy, when we have got several demands which are taken up in the course of several days, the Leaders of Parties who are members in the Business Advisory Committee here take a decision as to which are all the important demands for discussion and voting, and those demands are taken on different days and a division is allowed and voting is done, if wanted. Comparatively, minor demands which are not included on the different dates for discussion and for which discussion and voting may not be necessary, are taken up on the last day, so that they may be put in at the time, guillotine is applied. This decision is taken in the Business Advisory Committee. So, it is prudent and better not to ask for division after guillotine is applied, though it is not specifically prohibited in the rules.

VI.—GOVERNMENT BILLS

(1) THE INDIAN REGISTRATION (MADRAS AMENDMENT) BILL, 1966—*cont.*

MR. SPEAKER : Now, the discussion on the Indian Registration (Madras Amendment) Bill, 1966, will be continued.

The hon. Member, Sri V. Krishnamoorthy, will now speak.

*திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மன்றத்தில் நம்முடைய அமைச்சர் அவர்கள் இந்தியன் ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்டைத் திருத்தவேண்டுமென்ற சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தச் சட்டம், முதன் முதலாக நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தேவையற்றது. பொது மக்களுக்குப் பயன் அளிக்காதச் சட்டம் இது. இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதன்மூலம் தமிழ் நாட்டில் இருக்கிற சப் ரெஜிஸ்ட்ரார் ஆபீஸ்களில் இருக்கும் எழுத்தர்கள் குறிப்பாக 500. 600 குடும்பங்களுக்குத் தீமையை உண்டு பண்ணும் இந்தத் தமிழ் நாட்டில் இருக்கிற பொது மக்களுக்கும் இது பாதகமாக இருக்கும் என்ற வருத்தத்தையும் தெரிவித்துக் கொண்டு, இந்தச் சட்டத்தை தயவு செய்து நம்முடைய அமைச்சரவை மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று அதற்காகவாகிலும் இதனை வாபஸ் பெறவேண்டுமென்றும் கூறி என்னுடைய வருத்தத்தை முதற்கண் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன் இந்தச் சட்டத்தைப் பற்றி நம் அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் கொடுத்தார்கள். கொடுத்த விளக்கத்தில் சொல்லியிருக்கிறார்கள். குத்தகையும் அதுபோல் மிகச் சாதாரண மான டாக்குமென்ட்டை ரிஜிஸ்டர் செய்வதலைல் காப்பி மட்டும் கொடுத்தால் போதும். ஒரு ஆண்டு, இரண்டாண்டுகள் அல்லது மூன்றாண்டுகளோ குத்தகைக்கு நிலத்தை ஏற்றுக் கொண்டால், அதை ரெஜிஸ்டர் செய்வதற்கு